என் வாழ்நாளில் என் தலைவருக்கு இப்படியொரு நிகழ்ச்சி, நடந்ததைப் பார்த்து நான் பெருமைப்படுகிறேன்!

"முத்தமிழறிஞர் கலைஞர் பெயரில் பல்கலைக்கழகம் அமைப்பது" எனத் தீர்மானம் கொண்டு வந்த

# முதலமைச்சருக்கு என்னுடைய நன்றி! பாராட்டு!

## சட்டப்பேரவையில் அவை முன்னவர் – அமைச்சர் துரைமுருகன் நெகிழ்ச்சி உரை!



**சென்னை, ஏப். 26 -**

**சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், முத்தமிறிஞர் கலைஞர் அவர்கள் பெயரில் தமிழ்நாட்டில் பல்கலைக் கழகம் உருவாக்கப்பட வேண்டும் என, பல்வேறு சட்டப்பேரவைக் கட்சிகளின் தலைவர்கள் முன்மொழிந்து சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் உரையாற்றியதைத் தொடர்ந்து கழகத்தின் சார்பில் உரையாற்றிய அவை முன்னவரும் நீர் வளத் துறை அமைச்சருமான துரைமுருகன், 'என் வாழ்நாளில் என் தலைவருக்கு இப்படியொரு நிகழ்ச்சி நடந்தைப் பார்த்து நான் பெருமைப்படுகிறேன்! என்று நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் அவை முன்னவர் அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பேசியதாவது:-

மகிழ்ச்சியும், உணர்ச்சியும் கொண்டு இந்த அவையில் நான் அமர்ந்திருக்கிறேன். என்னைப் போலவே என்னுடைய கட்சியைச் சார்ந்த திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் (மேசையைத் தட்டும் ஒலி) மகிழ்ச்சியினுடைய துள்ளலிலே இருக்கிறார்கள். காரணம், எங்களையெல்லாம் வளர்த்து ஆளாக்கி அரசியலில் இன்றளவும் நிலைத்திருக்கிற அளவுக்கு செய்தவர் எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள். அவருடைய பெயரால், அவர் ஆரம்ப கால அரசியல் நடத்திய கும்பகோணத்தில் ஒரு பல்கலைக்கழகத்திற்கு அவர் பெயரை சூட்டுகிறார் என்பதில் எங்களுக்கெல்லாம் மகிழ்ச்சி. அதைவிட இந்த அவையில் பிரதான எதிர்க்கட்சி தவிர, அத்தனை கட்சிக்காரர்களும் வரவேற்று பேசியதற்காக உங்கள் அனைவருக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

### பல்கலைக் கழக விதி!

ஒரு விஷயத்தை நான் இங்கே தெரிவிக்க வேண்டுமென்று கருதுகிறேன். நான் ஒரு முறை சென்னைப் பல்கலைக்கழகத்தில் syndicate member சிண்டிகேட் மெம்பர் ஆக இருந்தேன். என்னோடு சிவந்தி ஆதித்தன், டாக்டர் இராமமூர்த்தி, பல் டாக்டர் இராஜன், பேராசிரியர் நாராயணசாமி, டாக்டர் லலிதா காமேஸ்வரன் போன்றவர்களெல்லாம் இருந்தார்கள். பல்கலைக்கழகத்தினுடைய விதி எப்படியென்றால், யாருக்காவது பட்டம் கொடுக்க வேண்டுமென்றால், அதைப்பற்றி ஒரு தீர்மானம் வரும். அந்தத் தீர்மானத்தை ஏகமனதாக ஏற்றுக் கொண்டால்தான் அந்தப் பட்டத்தை வாங்குகிறவர் வாங்கிக்கொள்வார். யாராவது ஒருவர் எழுந்து dissent note கொடுத்தால், அந்தப் பட்டத்தை வாங்குகிறவர், எனக்கு வேண்டாம் என்று சொல்லிவிடுவார்கள். இன்று வரையில் அதுதான் நியதி.

Dr. சாந்தப்பா அவர்கள், பல்கலைக்கழகத்தினுடைய Vice Chancellor ஆக இருந்தார். அவர் ஒரு திட்டம் போட்டிருக்கிறார். அப்போது முதலமைச்சராக இருந்தவர், மதிப்பிற்குரிய எம்.ஜி.ஆர். அவர்கள். அவருக்கு டாக்டர் பட்டம் தர வேண்டுமென்று Dr. சாந்தப்பா முடிவெடுத் திருக்கிறார். முடிவெடுத்தவர் என்ன செய்திருக்க வேண்டுமென்றால், முதலிலேயே syndicateஐ கூட்டி, தீர்மானத்தைக் கொண்டு வந்து, அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி யிருக்க வேண்டும். ஆனால், அவரே என்ன நினைத்துக்கொண்டார் என்றால், ஏதோ நாங்களெல்லாம் உறுப்பினராக இருப்பதால், தீர்மானத்தை எதிர்த்துவிட்டால் என்ன செய்வதென்று அவர் தயக்கம் காட்டினார். அதே நேரத்தில் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு டாக்டர் பட்டம் கொடுக்கின்ற தேதியும் நிர்ணயித்துவிட்டார். விழாவிற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டார். ஆனால், சிண்டிகேட்டினுடைய தீர்மானம் மட்டும் இல்லை. ஆகவே, அவர் என்ன செய்திருக்கிறார் என்றால், 10 மணிக்கு டாக்டர் பட்டம் கொடுக்கவிருக்கிறார்கள் என்றால், 8 மணிக்கு அதே நூற்றாண்டு மண்டபத்தில் அருகிலேயே syndicate கூட்டம் நடத்தி, தீர்மானத்தைப் படித்து, ஏகமனதாக நிறைவேற்றிவிட வேண்டுமென்று நினைத்தி ருக்கிறார். இது எங்களுக்குத் தெரிந்தது. என்ன செய்வதென்று தெரியவில்லை.

### தீர்மானம் முன்மொழிவு!

நான், டாக்டர் இராமமூர்த்தி, Prof. ராஜன், Prof. நாகநாதன் உள்ளிட்ட எல்லோரும் இதற்கு என்ன செய்யலாம்; தீர்மானத்தை ஆதரிப்பதா அல்லது எதிர்ப்பதா என்று தெரியவில்லை. இரவு 12-30 மணிக்கு சென்று, தலைவர் கலைஞர் அவர்களை எழுப்பினோம். டாக்டர் இராமமூர்த்தி கலைஞருக்கு மிக வேண்டியவர். "என்ன டாக்டர் இந்த நேரத்தில் வந்திருக்கிறீர்கள்" என்று கலைஞர் அவர்கள் கேட்டார்கள். நாளைக்கு அவருக்கு டாக்டர் பட்டம் கொடுக்கிறார்கள்; கொடுப்பதைப் பற்றி ஒன்றுமில்லை. திருட்டுத் தாலி கட்டுவது போன்று அப்போதே தீர்மானம், அப்போதே டாக்டர் பட்டம் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இதனை எப்படி செய்வதென்று கலைஞரிடம் சொன்னோம். அப்போது தலைவர் சொன்னார் "ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள், எனக்கும் எம்.ஜி.ஆர்.க்கும் ஆயிரம் அரசியல் வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் அவர் கலைத் துறையில் ஆற்றியிருக்கிற பணிக்கு, அவர் டாக்டர் பட்டம் வாங்குவதற்கு தகுதியுள்ளவர். Deserving. ஆகையினால், நீங்கள் யாரும் அதனை எதிர்க்கக் கூடாது" அடுத்து என்ன சொன்னார் -'துரை, நீ எதிர்த்துப் பேசக் கூடாது; அவர் உனக்கு அநேகம் செய்திருக்கிறார். இன்றைக்கு உன் மேல் அவர் அன்பு வைத்திருக்கிறார். ஆகையினால் நீயே அந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து பேச வேண்டும்" என்று என்னிடத்தில் சொன்னார்.

### சிண்டிகேட் கூட்டம்!

மறுநாள் காலையில் நாங்களெல்லாம் சிண்டிகேட் கூட்டத்திற்குச் சென்றோம். அன்றைக்கு அமைச்சராக இருந்த பண்ருட்டி இராமச்சந்திரன் அங்கே இருந்தார். ஜே.பி.ஆர். இருந்தார். அப்போதெல்லாம் செல்போன் கிடையாது. அப்போது பெரிய phoneல் பேசுவார்கள். அதிலிருந்து தோட்டத்திற்கு பேசிக் கொண்டி ருந்தார்கள். தீர்மானம் வந்தது: கடைசியாக அந்தத் தீர்மானத்தை நான் தான் முன்மொழிந்தேன். அநத்த் தீர்மானத்தை நிறைவேற்றினோம். உடனே, பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் எனக்கு கை கொடுத்தார்கள். ஜெ.பி.ஆர். உடனே என் எதிரில்தான் அண்ணனுக்கு போன் செய்தார். இதுபோன்று தீர்மானத்தை ஒத்துக்கொண்டோம் என்பதைத் தெரிவித்தார். அண்ணன் எம்.ஜி.ஆர் அவர்கள் காரில் வந்து இறங்கினார் . நான் அவரை வரவேற்பதற்காக அங்கே கேட்டில் நின்று கொண்டிருந்தேன். வந்து இறங்கியவுடன் என்னுடைய தோளின் மீது கையைப் போட்டார். ஆனால், அவர் சீஃப் கெஸ்ட் அல்லவா!

முதலில் கேள்வி கேட்டார். "இரவு 12.30 மணிக்கு தலைவரை சென்று பார்த்தீர்களா" என்று கேட்டார். 'தலைவர்' என்றுதான் சொன்னார். "தலைவரை சென்று பார்த்தீர்களா?" என்று கேட்டார். "ஆம்." எதற்காக? என்று கேட்டார். அவருக்கு எல்லாம் தெரிந்து விட்டது. சீஃப் மினிஸ்டர் இல்லையா. என்ன சொன்னார் என்று கேட்டார்.

எந்தக் காலத்திலும் எதிர்க்கக்கூடாது. அவர் டிசோர்விங் அவருக்கு முழுக்க முழுக்க கிடைப்பதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி என சொல்லிவிட்டு என்னை புரபோஸ் செய்ய சொன்னார். நான் தீர்மானத்தை புரபோஸ் செய்துவிட்டேன். தோள் மீது கைபோட்டு வந்தார். வரும்போதே convocation gown போட்டு வந்தார். நம்பமாட்டீர்கள் நண்பர்களே, ஆயிரம் மேடையிலே சொல்லியிருக்கிறேன், பதிவு செய்திருக்கிறேன். அவர் கண்ணிலிருந்து கண்ணீர் வந்துவிட்டது. கண்ணீர் வந்துவிட்டது. எல்லாரும் பார்க்கிறார்கள் என்று சொன்னார். டீ குடிக்கத்தான் அழைத்துச் சென்றார். Tea கொடுக்கவில்லை. என்னை மட்டும் தனியாக அழைத்து உட்கார வைத்துவிட்டு, "தலைவருக்கு எப்படியிருக்கிறது உடம்பு? இரவு 12 மணிக்கு சென்று எழுப்பலாமா, அவருக்கு உடம்பு சரியில்லை அல்லவா?" என்று வேகமாக கோபமாக திட்டினார். திட்டிவிட்டு, அந்த சிண்டிகேட் மெம்பர்ஸ் ஆக போகவேண்டும். யார் யார் போக வேண்டும், அந்த ஸ்டேஜில் சென்று உட்காருவதெல்லாம் என்று பெரிய அளவில் இருக்கும். முதலமைச்சரை அழைத்தார்கள். அவர், Vice Chancellor, Governor எல்லாரும் சென்றார்கள். நாங்களும் சென்றோம். சிண்டிகேட் மெம்பர் ஆக இருந்தாலும், அவர் சொன்னார் அவர் கிடக்கிறார் வா அப்படி என் தோள் மேல் கைபோட்டு கொண்டு சென்றார்.

அவர் பக்கத்து சீட்டில் கவர்னர் உட்கார வேண்டும். "அவர் உட்காருகிறாரோ இல்லையோ, நீ பக்கத்தில் உட்காரு" பிறகு கலைஞர் பற்றி எல்லாம் சொல்லிக் கொண்டிருந்தார். ஆகையினால் தனக்கு எதிரியாக இருந்தாலும்கூட அவர் deserving, அவருக்குத் திறமை இருக்கிறது. அதை ஆதரித்தவர் தலைவர் கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி). ஆயிரம் கருத்துகள் எனக்கும் அவருக்கும் இருக்கும். ஆனால் அவர் வாங்க தகுதியானவர் என்று சொன்னார். ஆகையினால் யாருக்கு தகுதியிருக்கிறதோ அந்த தகுதியை பாராட்டுகிறவர்தான் பெரியவர்கள், பெரியவர்களுடையவர்கள் என்று கூறி என் வாழ்நாளில் என் தலைவருக்கு இப்படியொரு நிகழ்ச்சி நடந்ததை பார்த்து நான் பெருமைப்படுகிறேன். முதலமைச்சருக்கு,

மகன் தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை
என்நோற்றான் கொல்லெனும் சொல்.

நீங்கள் எத்தனையோ காரியங்கள் செய்தீர்கள். காலாகாலத்திற்கும் University இருக்கும். அதைக் கொண்டுவந்ததற்காக முதலமைச்சருக்கு என்னுடைய நன்றியையும்,பாராட்டையும் தெரிவித்து விடை பெறுகிறேன்.

இவ்வாறு அவை முன்னவர் அமைச்சர் துரைமுருகன் பேசினார்.

---

தமிழ்நாட்டில் உயர்கல்வியின் பெரும் வளர்ச்சிக்கு வித்திட்ட

# 'முத்தமிழறிஞர்' கலைஞர் பெயரில் பல்கலைக்கழகம் அமைப்பது போற்றுதற்குரியது!

## சட்டப்பேரவையில் – பேரவைத் தலைவர் மு.அப்பாவு உரை!



*சென்னை, ஏப்.26-*

முத்தமிழறிஞர் கலைஞர் பெயரில் பல்கலைக் கழகம் அமைப்பது எனும் முதல்வரின் அறிவிப்பை சட்டப்பேரவையில் வரவேற்று உரையாற்றிய பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள், "தமிழ்நாட்டில் உயர்கல்வியின் பெரும் வளர்ச்சிக்கு வித்திட்ட முத்தமிழறிஞர் கலைஞர் பெயரில் பல்கலைக் கழகம் அமைப்பது போற்றுதலுக்குரியது" என்று குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் - பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் பேசியதாவது:

மறைந்த நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுக்கு பல்கலைக்கழகம் கொண்டுவர வேண்டுமென்ற இந்த தீர்மானத்தின்மீது எல்லோரும் கருத்துகளை சொல்லியிருக்கின்றீர்கள். இன்றைய முதல்வர் அவர்கள்தான் கல்வியின்மீது கலைஞர் அவர்கள் எவ்வளவு நாட்டம் கொண்டவர் என்பது எல்லோருக்கும் தெரியும். இன்றைய முதல்வர் பள்ளிக்கு செல்கின்ற மாணவ, மாணவிகளுக்கு கட்டணமில்லாமல் பேருந்து வேண்டுமென்று கேட்டதும் அதற்கு ஆணையிட்டு, முதன்முதலாக முதல் பட்டதாரிகள் கட்டணமில்லாமல் உயர் கல்வி படிக்கலாம் என்ற திட்டத்தை கொண்டு வந்து, கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னால்கூட ஒரு நிகழ்ச்சியிலே கலந்து கொண்ட பெண்மணி கலைஞர் அவர்கள் கொண்டுவந்த அந்த உயர்கல்வியிலே, முதல் பட்டதாரிக்கு கட்டணமில்லாமல் படிக்கலாம் என்ற திட்டம் வரவில்லை என்று சொன்னால் நான் இந்த உயர்பதவிக்கு வந்திருக்க முடியாது என்று அப்போது மாவட்ட வருவாய் அதிகாரியாக இருந்தவர், இன்று கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய ஆட்சியராக இருக்கிறார் என்று சொன்னால் கலைஞர் அவர்கள் அன்று கொண்டுவந்த உயர்கல்விக்கு, முதல் பட்டதாரிக்கு கட்டணமில்லாமல் (மேசையைத் தட்டும் ஒலி) கட்டணமில்லாமல் முதல் பட்டதாரி படிக்கலாம் என்று தலைவர் கொண்டுவந்த அந்த திட்டம்தான்.

ஆகவே பல்கலைக்கழகங்களுக்கு எல்லாம் பல்கலைக்கழகமாக இருந்த கலைஞர் அவர்கள் பெயரில் பல்கலைக்கழகம் கொண்டு வருவதற்கு இந்த 55 விதியை நானும் ஆதரிக்கிறேன்.

இவ்வாறு மு.அப்பாவு அவர்கள் பேசினார்.

---

# கும்பகோணம் மகாமகக் குளத்தில் படகுச் சவாரி!

## சட்டப் பேரவையில் - அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!



**சென்னை, ஏப். 26-**

**சட்டப் பேரவையில் கும்பகோணம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் க.அன்பழகன் எழுப்பிய கேள்வியும் அமைச்சர் இரா. இராஜேந்திரன் அளித்த பதிலும் வருமாறு:-**

**டாக்டர் சி. சரஸ்வதி:** மொடக்குறிச்சி ஒன்றியம், மொடக்குறிச்சி தொகுதி, எழுமாத்தூர் ஊராட்சி, கனககிரி மலை கனகாச்சலகுமரன் முருகன் கோயில் மிகவும் பிரசித்தி பெற்ற கோயில். அங்கு பௌர்ணமி மற்றும் அமாவாசை நாட்களில் ஏராளமான பக்தர்கள் வருவதோடு, அந்த மலையில் கிரிவலமும் செல்கிறார்கள். தற்போதுள்ள கிரிவலப் பாதை கரடு முரடான மண் சாலையாக உள்ளது.

எனவே, பழமையும், புராதனமும் மிக்க இந்தக் கோயிலில் பக்தர்கள் பயன்பெறும் வகையில், கிரிவலப் பாதை மற்றும் மலைக்கு மேலே செல்லும் சாலை ஆகிய மண் சாலைகளைத் தார்ச் சாலைகளாக அமைத்துத் தர நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் இரா.இராஜேந்திரன்:** புராதனமான முருகன் கோயிலுக்கு கிரிவலப் பாதை மற்றும் மலைக்கு மேல் செல்கிற பாதை ஆகியவற்றை அமைத்துத் தர வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அவற்றை இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் செய்வதற்கான வசதி வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் இந்தக் கோரிக்கையை வைத்தால், அவர் பரிசீலிப்பார் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**க.அன்பழகன்:** கும்பகோணம் மாநகராட்சியைப் பொறுத்தவரையில், வணிகர்களும், விவசாயி களும் நிறைந்திருக்கிற பகுதியாகும். கோயில்கள் அதிகம் இருக்கக்கூடிய பகுதி என்பதால், உலகம் முழுவதிலு மிருந்தும் பக்தர்கள் அதிகமாக சுற்றுலா வரக்கூடிய நிலையில், கும்பகோணம் மாநகராட்சிக்குச் சொந்தமான சேய் குளத்தில் படகு சவாரி செய்வதற்கு ஏதுவாக படகுக் குழாம் அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், 1989 ஆம் ஆண்டில், அண்ணன் கோ.சி. மணி அவர்களால் மகாமகக் குளத்தில் படகு விடப்பட்டு, ஆட்சி மாற்றத்தால் அது நிறுத்தப்பட்டு விட்டது.

அந்தப் பகுதி மக்களின் பொழுதுபோக்கிற்கு ஏதுவாக நம்முடைய அரசு மீண்டும் படகுக் குழாம் அமைத்து, படகு சவாரிக்கு ஏற்பாடு செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் இரா. இராஜேந்திரன்:** உறுப்பினர் க. அன்பழகன் அவர்கள், இந்தக் கோரிக்கையை கடிதம் மூலமாகவும் என்னிடத்தில் கொடுத்திருக்கிறார்கள். முன்னாள் அமைச்சர் கோ.சி.மணி காலத்தில் படகு விடப்பட்டது என்றும் தெரிவித்து, தற்போது மீண்டும் படகு இயக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள்.

இது தொடர்பாக சுற்றுலாத் துறை அதிகாரிகள்மூலம் ஆய்வு செய்து, நிதி நிலைமைக்கேற்ப அந்தப் பணி மேற்கொள்ளப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் இரா.இராஜேந்திரன் பதிலளித்தார்.

---



விழுப்புரம் மாவட்டம் ஊரக வளர்ச்சி துறை சார்பில் செஞ்சி, மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு 22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 619 பயனாளிகளுக்கு கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்கான பணி ஆணைகளை வழங்கினார். உடன்ஒன்றிய பெருந்தலைவர்கள் செஞ்சி விஜயகுமார் ,மேல்மலையனூர் கண்மணி நெடுஞ்செழியன், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், சாந்தி சுப்பிரமணியன், துணை சேர்மன்கள்செஞ்சி ஜெயபாலன், மேல்மலையனூர் விஜயலட்சுமி முருகன், மாவட்ட கவுன்சிலர்கள் அரங்க ஏழுமலை, செல்வி ராம சரவணன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் செஞ்சி நடராஜன், பிரபா சங்கர்,மேல்மலையனூர் ஜெய் சங்கர், சிவனேசன் உள்ளனர்.

---

## "மே தின விழா"

### தி.மு.க. தொழிலாளர் அணியின் சார்பில் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்களில் மேதின நினைவுச் சின்னத்தின் படத்திற்கு மலர்வளையம் வைத்து வீரவணக்கம் செலுத்திட

தி.மு.க. தொழிலாளர்அணிச் செயலாளர் பி.டி.சி. ஜி.செல்வராஜ் வேண்டுகோள்!

உழைப்பவர்கள் போற்றும் உன்னதத் திருநாளாம் "மே தின"மாகிய 1.5.2025 அன்று காலை, "தொழிலாளர்களின் காவலன்" மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மாநிலம் முழுவதும் தி.மு.க. தொழிலாளர் அணியின் சார்பில் "மேதின விழா" கொண்டாடிட முடிவு செய்ததன் தொடர்ச்சியாக,

தி.மு.க. தொழிலாளர் அணியின் மாவட்ட மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர்களில் "மே தின நினைவுச் சின்னத்தின்" படத்திற்கு மலர்வளையம் வைத்து கொண்டாடிட வேண்டுமென மாவட்ட மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் தொழிலாளர் அணி நிர்வாகிகளை கேட்டுக் கொள்கிறேன்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 24.04.2025

பிடிசி ஜி.செல்வராஜ்,
செயலாளர்,
தி.மு.க. தொழிலாளர் அணி.

---

பாவேந்தர் பிறந்தநாள்: தமிழ் வார விழாவாகக் கொண்டாட்டம்!

# முதல்வரின் அறிவிப்பு வரலாற்றுச் சிறப்புமிக்கது!

## கவிஞர் பொன்னடியார் அறிக்கை!



*சென்னை, ஏப்.26-*

"பாவேந்தர் பிறந்தநாளை தமிழ்வார விழாவாகக் கொண்டாடப்படும் என்று அறிவித்த முதல்வரின் அறிவிப்பு வரலாற்றுச் சிறப்பு மிக்கது" என்று கவிஞர் பொன்னடியார் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாள் தமிழ் வார விழாவாகக் கொண்டாடப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பாகும்.

அப்பெருமகனின் தந்தையார் கலைஞர் அவர்கள், அவரின் இளமைக் காலந்தொட்டு பாவேந்தரின் புகழை பல்வேறு வழிகளில் பரப்பியவர். தமிழக முதல்வராக அவர் இருந்தபோது 1990-ஆம் ஆண்டு பாவேந்தர் படைப்புகளை அரசுடைமையாக்கி தமிழ் நெஞ்சங்களின் வாழ்த்துகளைப் பெற்றவர்.

அன்னாரின் வழியில் பாவேந்தரின் புகழ் போற்றும் முதல்வரின் தமிழ் வார விழா கொண்டாட்ட அறிவிப்புக்கு தமிழ் மக்களுடன் சேர்ந்து தமிழக கவிஞர் பெருமன்றமும் நன்றி கூறி வணங்குகிறது.

இவ்வாறு கவிஞர் பொன்னடியார் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

திராவிடர் கழகம் ஒருங்கிணைப்பில் –

# ஆரிய பண்பாட்டுப் படையெடுப்புக் கண்டன மாநாடு!

## கி.வீரமணி தலைமை! ஆர்.பாலகிருஷ்ணன் -வா.மு.சேதுராமன் பங்கேற்பு!

*சென்னை, ஏப்.26-*

திராவிடர் கழகம் ஒருங்கிணைப்பில் ஆரிய பண்பாட்டுப் படையெடுப்புக் கண்டன மாநாடு அகஸ்தியப் புரட்டு 28.04.2025 திங்கள் கிழமை மாலை 6 மணிக்கு சென்னை பெரியார் திடல், நடிகவேள் எம்.ஆர்.ராதா மன்றத்தில் நடைபெறுகிறது.

இந்த நிகழ்ச்சிக்கு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமை தாங்குகிறார்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவரும், சிந்து வெளி ஆய்வாளருமான ஆர்.பாலகிருஷ்ணன் தொடக்கவுரை ஆற்றுகிறார்.

பன்னாட்டு தமிழுறவு மன்ற உலக அமைப்பாளர் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் நோக்க உரை ஆற்றுகிறார்.

மேலும் பேராசிரியர் முனைவர் மறைமலை இலக்குவனார், பேராசிரியர் முனைவர் வீ. அரசு, பேராசிரியர் அ. கருணானந்தன் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

பகுத்தறிவு எழுத்தாளர் மன்றத் தலைவர் முனைவர் வா.நேரு நன்றியுரை ஆற்றுகிறார்.